★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 27 ரபி. ஆகி 25 இதழ் 362

யாழ்ப்பாணம் புதன்கிழமை 9—2—83

சம்மாந்துறை வங்கி கொள்ளை:

## ரூ. 5-லட்சம் நகைகள் மீட்பு; சந்தேகநபர் மூவர் கைது!

[கொழும்பு]

சம்மாந்துறை சவளக்கடை கிராமிய வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட 15 லட்சம் ரூபா நகைகளில் சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை பாழடைந்த மண்டபத்தின் நிலத்திற்கடியிலிருந்து பொலிசார் மீட்டுள்ளனர்.

கல்முனை உதவி பொலிஸ் அதிபர் திரு எஸ். நவரத்தின ராசாவின் பணிப்பின்பேரில் சப் இன்ஸ்பெக்டர் எஸ். ஏ. பெரேரா, கன்ஸ்டபிள்கள் மானகே, ஸ்ரேகனு ஆகியோர் இந்த நகைகளை மீட்டுள்ளனர். கன்ஸ்டபிள் தேவலிங்கத்திற்கு கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்தே தேடுதல் வேட்டை நடைபெற்றது.

மீட்கப்பட்ட நகைகளில் ஒரு தோடும், பென்ரனும் போலியானவை என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (மா)

### நீர்வேலி வழக்கு நேற்று விசாரணை நடக்கவில்லை

(கொழும்பு)

நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கு விசாரணை நேற்று நடைபெறவில்லை. மொழிபெயர்ப்பாளர் வராததால்,

8-ம் பக்கம் பார்க்க)

# வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு:

# ரூ. 2885 கோடி துண்டுவிழும்

## உத்தேசசெலவுரூ 4965கோடி வருமானம் ரூ 2080 கோடி

(இ. சந்தசாமி)

அடுத்தமாதம்பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் வரவுசெலவுத் திட்டத்தில் 2885 கோடியே 20 லட்சம் ரூபாய் துண்டுவிழும் என நிதியமைச்சர் திரு. ரொனி டிமெல் அமைச்சரவைக்குத் தெரிவித்துள்ளார்.

1983ம் ஆண்டுக்கான உத்தேச மொத்தச் செலவுத் தொகை 4965 கோடியே 50 லட்சம் ரூபாய் என்றும் மொத்த வருமானம் 2080 கோடியே 30லட்சம் என்றும் நிதியமைச்சர் மதிப்பீடுசெய்துள்ளார்.

நிதியமைச்சரின் இந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை அமைச்சரவை நேற்றுஏற்றுக்கொண்டதாக அமைச்சரவையின் பேச்சாளரான இராஜாங்கஅமைச்சர் திரு ஆனந்த திஸ்ஸ டிஅல்விஸ் நேற்றுப் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

### அமைச்சரவை ஏற்றது

1983ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் தொடர்பான நிதி ஒதுக்கீட்டுச்

(8-ம் பக்கம் பார்க்க)

## வானொலியில் ஜி ஜி. பற்றிய சொற்பொழிவுகள் இன்று

(கொழும்பு)

மறைந்த தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவுநாளை யொட்டி இன்று இலங்கை வானொலியில் மும்மொழிகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படவிருக்கின்றன.

இன்று மாலை 6. 15மணியிலிருந்து 6 30 மணிவரை தமிழில் தமிழ்ச் சேவை ஒன்றில் திரு. தில்லையம்பலம் மகேந்திரராசா சொற்பொழிவாற்றுவார்.

இரவு 9 மணியிலிருந்து 9 15 மணிவரை டாக்டர் டபிள்யூ தகநாயகா எம். பி. ஆங்கிலத்தில் உரையாற்றுவார். சிங்கள மொழியில் சிரேட்ட சட்டத்தரணி திரு. பயா பெரேரா உரை நிகழ்த்துவார்.

பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம்

## வானில்சென்ற இருவருக்கும் பலத்த காயம்!

அராலியில் நேற்று நடந்த சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கடமையிலீடுபட்டிருந்த பொலிசாரின் சமிக்ஞையை மீறிச் சென்றதாகக் கருதப்படும் வான்மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது வான்சாரதியும், அருகில் இருந்தவரும் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகிபலத்தகாயமடைந்தனர்.

சோமசுந்தரம் உதயகுமாரன் (16-வயது), ரி. சிவசுப்பிரமணியம் (30 வயது) ஆகிய இருவருமே துப்பாக்கி சூட்டுக்கிலக்கானவர்கள். இருவரும் காரைநகர் பாலக்காட்டைச் சேர்ந்தவர்கள்.

அராலிப் பாலத்துக்குச் சமீபமாக இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

"துப்பாக்கிச் சூட்டுக்காயத்துக்கிலக்கான உதயருமானின் பேத்தியார் மரணமானதைத் தொடர்ந்து அவரது மரணச் சடங்குக்குத் தேவாரம் பாடுபவர்களை அழைத்துச் செல்வதற்கு அதிகாலை 4 மணியளவில் உதயகுமாரனும், சிவசுப்பிரமணியமும் கேம்பிறிட்ஜ் வானில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டனராம். சிவசுப்பிரமணியம் வானை ஓட்டிவந்தார்.

[8-ம் பக்கம் பார்க்க]

பாராளுமன்ற புதிய அமர்வு:

## ஜனாதிபதி இன்று ஆரம்பித்துவைப்பார்

[கொழும்பு]

1978ம்ஆண்டு அரசமைப்புத் திட்டத்தின்கீழ் அமைந்த முதலாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வினை இன்று காலை ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்தன சம்பிரதாய முறைப்படி ஆரம்பித்து வைப்பார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஜனாதிபதி நிகழ்த்தவிருக்கும் உரையில் தமது கட்சியின் எதிர்கால வேலைத்திட்டங்கள்பற்றி எடுத்துரைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்

[8-ம் பக்கம் பார்க்க)


# கே.எஸ்.பி. டூர்ஸ்

அளிக்கும்

அதி நவீன லக்ஷறி கோச் சேவை

11-02-1983 வெள்ளிமுதல்

## யாழ்ப்பாணம்-கொழும்பு

தொடர்புத் தொலைபேசி இலக்கம் : 23517 - 23403

மேலதிக விபரங்களை 8-ஆம் பக்கத்தில் பார்க்க



## அரிய சந்தர்ப்பம்

மீண்டும் புதிய வகுப்புகள் ஆரம்பம்

● COMPUTER PROGRAMMING ●

முதலில் சேரும் 25 மாணவருக்கு இலவசப்பயிற்சி

● HOTEL MANAGEMENT ●

விசேட விரிவுரைகள், நட்சத்திர ஹோட்டல்களில் செய்முறைப் பயிற்சி (Practical) இருபாலாரும் கற்கலாம்

★ றேடியோ - டெலிவிஷன் ★

சிறந்த செய்முறைப் பயிற்சி

ஆரம்பம்: 12-02-83

நேரில் வரவும்.

**The School of Computer Studies**

52/1, கனகரத்தினம் கட்டிடம்,
(வீனஸ் றெக்கோடிங் பார் மேல் மாடி)
ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

4-2-83, 6-2-83 திகதிய பத்திரிகைகளில் ஆரம்பம் 12-03-83 என்றிருப்பது தவறாகும்.

6091

## வரி விளம்பரம்

### பயிற்சி

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், எலக்றிக்கல் வயறிங், எலக்றிக்கல் றிவைண்டிங், மோட்டமெக்கனிசம், வெல்டிங் பயிற்சிகள் ஆரம்பம் 09-02-83 விபரம் நேரில். (The School of Computer Studies) 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் மேல் மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6035

### விற்பனைக்கு

ஒருபகுதி கற்கள் அகற்றப்பட்ட 100 பரப்பு செம்மண் தரை பழத்தோட்டம் பலாலி விமான நிலையத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் தம்பாலை வீதியில் விற்பனைக்குண்டு. 3 வருட வளர்ச்சியுடைய 100 மா மரங்களும் வேறு பல பழ மரங்களும் இரு நன்னீர்க்கிணறுகளும், மூன்று அறைகளைக் கொண்ட வீடும், முழுவளவும் 4 அடி உயரமான மதில் பாதுகாப்பு உண்டு. விபரங்களுக்கு 399, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 6065

$9\frac{1}{2}$ பரப்பு காணி மானிப்பாய் உடுவில் றோட்டில், சங்குவேலிக்குச் செல்லும் றோட்டு முகப்பில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். வ. இராசரத்தினம், 4ம் கட்டை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 6117

முத்திரைச்சந்தை, செம்மணி றோட், கல்வி இலாக்காவுக்கு அண்மையில் செல்லர் ஒழுங்கையில் வீடுகட்ட ஒன்றரைப் பரப்புக்காணித்துண்டுகள் மூன்று விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: T. ஆசீர்வாதம் C/o ந. கிருஷ்ணசாமி, 23, கடற்கரை வீதி, பருத்தித்துறை என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 6129

ஒரு மரம் அரியும் மின்சார யந்திரமும், மரம் சீவி அரிந்து வேலைசெய்யும் யந்திரமும் எம்மிடம் விற்பனைக்குண்டு. த. கனகசபை, கோண்டாவில் கிழக்கு (இ. போ. ச. அருகாமையில்), நேரில் தொடர்பு கொள்ளவும். 6121

### தேவை

நடுத்தர வயதுள்ள கார் ஓட்டக் கூடிய காவலாளி தேவை தொடர்பு: Dr. சி. ச. சேனாதிராசா மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 6116

### வைத்தியம்

மனநோய், வலி, அல்சர், சருமநோய்கள் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். ஜெயந்தி வைத்தியசாலை, 218/5 பலாலி வீதி, சுந்தர்மடம், யாழ்ப்பாணம். 6127

### WANTED

Programme Secretary for Jaffna Y M C A. Applications on prescribed forms available with General Secretary closing on 28th February. Basic salary between 350 to 600 p m with allowances now Rs 426/- Point on scale will depend on qualifications and experience. 6118

---

யாழ். நகர வாகன நெருக்கடி:

# பரிகாரம் காணுமாறு நல்லூர் 'சிவா' மகஜர்

[யாழ்ப்பாணம்]

'யாழ் நகரிலும், குறிப்பாக யாழ். பிரதான வீதியிலும் வாகனங்கள் அதிவேகத்தில் செல்வதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதுடன், பொதுமக்களும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறார்கள். இது விஷயத்தில் கூடிய கவனம் செலுத்திப் பரிகாரம் காண வேண்டும்' என்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும், நல்லூர் எம்.பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம், யாழ். பொலிஸ் அதிபர் திரு. ரி. இ. ஆனந்தராஜாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அரியாலைப் பகுதி பொது ஸ்தாபனங்களும், வடபகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் திரு. சிவசிதம்பரத்திடம் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்தே, அவர் பொலிஸ் அதிபருக்கு இந்த மகஜரை அனுப்பிவைத்தார்.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'யாழ். நகரிலும் குறிப்பாக கண்டி பிரதான வீதியில் வாகன வேகக்கட்டுப்பாடு இருந்தும் சாரதிகள் வாகனங்களை அதிவேகமாகச் செலுத்துவதால் அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன. குறைவான வேகத்தில் வாகனங்களைச் செலுத்தினால் அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கும். இது விடயத்தில் கூடியகவனம் செலுத்திப் பரிகாரம் காண வேண்டும்.' [மா]

## கலைஞர் வட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் கலை, கலாச்சாரப் பாரம்பரியங்களை வெளிக்கொணரும் பொருட்டு மன்னார் மாவட்ட கலைஞர் வட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட கலைஞர் வட்டத்தின் அங்குரார்ப்பண கூட்டம் சின்னப்பண்டிவிரிச்சான் அரசினர் பாடசாலையில் நடிகர் திரு. உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

## அமைச்சருக்கு அறிவிக்க வேண்டும்

(மன்னார்)

சிலாவத்துறைக்கடலில் தினமும் சேகரிக்கப்படும் முத்துச் சிப்பிகளின் தொகையையும், ஏனைய விபரங்களையும் உடனுக்குடன் கடல்த்தொழில் அமைச்சிற்கு அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு கடல்த் தொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா சிலாவத்துறை, பேசாலை கடல்த் தொழில் கூட்டுத் தாபனங்களுக்கு அறிவித்துள்ளார்.

## பிரசித்த ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 180, சேர் பொன். இராமநாதன் வீதி, திருமதி தா. சி. குமாரசாமி, கனகம்மா அவர்களிடம் 20-9-76 தொடக்கம் 8-1-82 வரை அடைவு வைத்துமீட்கப்படாத நகைகள் 5-3-83 காலை 9-00 மணிமுதல் அதே அடைவு கடையில் வைத்து என்னால் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏல விற்பனவாளர்,
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

6089

---

"நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை

ஆசிரியர் விடுதி மேற்பார்வையாளர்

## தேவை

தகைமை: ஜீ. சி. ஈ. உயர்தரம் - நான்கு பாடங்கள்

மேலதிக தகைமைகள்: பாலர் பயிற்சி, கைப்பணி வேலைகள்

வேதனம்: 700 - வாழ்க்கைச் செலவுப்படி அல்லது 550 - வாழ்க்கைச் செலவுப்படி, இலவச விடுதிஉணவு வழங்கப்படும். விடுதியிற் தங்குதல் வேண்டும்.

15 - 2 - 83க்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்,
நவீல்ட் பாடசாலை,
கைதடி.

6119

---

## விமர்சனப் போட்டியில் பரிசு

(புலோலி)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினால் நடாத்தப்பட்ட வானொலி விமர்சன தமிழ் போட்டியில் புலோலி தெற்கு முருகையன் கோவிலடியைச் சேர்ந்த திரு. எஸ். இரத்தினம் பரிசு பெற்றுள்ளார்.

---

# FRENCH FILM FESTIVAL

at the

**Shanthy Cinema**

Organised by the French Embassy
and the
Alliance Francaise de Jaffna
130, lst Cross St., Jaffna
From 9th to the 14th February 1983

Title; 1. DONKEY'S SKIN
2. PEPERMINT SODA
3. COLD CUTS
4. A WEEK'S HOLIDAY
5. SWINDLINGS OF SCAPIN
6. MOLIERE

All film wil be sub-titled ln English.

(6131)

---

மகாராஜா ஸ்தாபனத்தாரின் வடபகுதி

# எஸ் லோன் புதிய விநியோக நிலையம்

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ் ஸ்தாபனத்தாரால் சேவைப்படுத்தும் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள "எஸ் லோன்" விநியோக நிலையம்
எஸ் லோன் விற்பனையாளரின் வசதியைக் கருதி
ஸ்ரான்லி றேட் 158-ம் இலக்க எஸ். வி. எம். கட்டிடத்தில்;
மகாராஜா ஸ்தாபன சந்தைப்படுத்தும் முகாமையாளர்
திரு. T. S. கணேந்திரன் அவர்களால்
1983-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10-ந் திகதி
வியாழக்கிழமை பகல் 12-00 மணியளவில்
திறந்துவைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றோம்.

## நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி

# ஷப்ரு ★ நம்பிக்கை ★ நாணயம் ★ அனுபவம்

நிதி உதவிகள்

* வர்த்தக, விவசாய உபகரண வாடகை கொள்வனவு உதவி
* விவசாயம், கைத்தொழில், இறக்குமதி வியாபாரம், நிதி ஏற்பாடு
* நீங்கள் விற்கவிருக்கும் காணி, வீடுவளவு சிரமமின்றி நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுத்தல்
* ரி. வி. (கலர்) குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு, CANON கணித்தற்பொறி, மின்விசிறி, மோட்டார் சைக்கிள் -- உடன் விலைக்கும் அல்லது தவணை முறை அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகள்

தேவை எதுவானாலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

* ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இரவு 9-15 மணிக்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன வர்த்தக சேவையில் எமது "துப்பறியும் காளைகள்" நாடகத்தை கேட்க தவறாதீர்கள்.

# SHABRA UNICO FINANCE LIMITED

(இலங்கை மத்திய வங்கியில் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

**தலைமை அலுவலகம்**
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

**யாழ்ப்பாணம்**
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# பெய்ரூட் படுகொலை விசாரணை அறிக்கையை பெகின் ஆராய்வார்

டெல்அவிவ், பெப். 8

**பெய்ரூட் படுகொலைபற்றி ஆராய நியமிக்கப்பட்ட இஸ்ரேலிய ஆணைக்குழுவின் அறிக்கைபற்றி இஸ்ரேலிய பிரதமமந்திரி திரு. மெனுச்சம் பெகின் இன்று ஆராயவுள்ளார்.**

பெய்ரூட் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழிருந்த போது அங்குள்ள இரு அகதிகள் முகாம்களிலிருந்த ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் படுகொலை செய்யப்பட்டது பற்றி ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மூன்று பேரடங்கிய ஆணைக்குழுவொன்றை இஸ்ரேல் பிரதமர் திரு. மெனுச்சம் பெகின் நியமித்திருந்தார்.

இக்குழு இப்படுகொலைபற்றி விசாரணை நடத்தி தனது அறிக்கையை திரு. பெகினிடம் கையளித்துள்ளது. இதுபற்றி ஆராய்வதற்காக திரு பெகின் தனது அமைச்சரவையை இன்று விசேடமாகக் கூட்டவுள்ளார்.

பெய்ரூட் படுகொலைக்கான பொறுப்பை இதுபற்றி ஆராய்ந்த ஆணைக்குழு திரு. பெகின் மீது சுமத்தியிருந்ததால் அவர் இஸ்ரேலில் பொதுத்தேர்தலொன்றை நடத்துவாரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## எரிந்தது!

லண்டன், பெப். 8

சோவியத் யூனியனின் அணுசக்தி செய்மதியான 'கொஸ்மஸ் – 1402'இன் அணுஉருளைப்பகுதி தென்னத்திலாந்திக் சமுத்திரத்தில் விழுந்துஎரிந்து போனதாகத் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## வர்த்தலைவிளானில் குழந்தைகள் சிகிச்சை

(மயிலிட்டி)

வர்த்தலை விளான் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டச்செயலாளர் திருமதி குகவதி மாணிக்கவாசகர் விடுத்தகோரிக்கையை அடுத்து காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. செ. தெய்வேந்திரம் வர்த்தலைவிளானில் ஒரு குழந்தைகள் சிகிச்சைப்பிரிவை நடத்த இணங்கியுள்ளார், இதன்மூலம் வர்த்தலைவிளான், கட்டுவன்-பலாலிவிளைபோன்ற பகுதிகளிலுள்ள தாய்மார் எதிர்நோக்கிய சிரமங்கள் தவிர்க்கப்படுகின்றது. முன்பு இப்பகுதிமக்கள் பலாலி விமான நிலையத்துக்கு முன்புள்ள சிகிச்சை நிலையத்திலேயே குழந்தைகளுக்கு சிகிச்சைபெற்றுவந்தனர்.

வர்த்தலைவிளான் வாலிபர் சங்க மண்டபத்திலே இம்மாதம் 11ம் திகதி காலை 11 மணிக்கு திரு. தெய்வேந்திரம் மேற்படி சிகிச்சைப்பிரிவை ஆரம்பித்துவைப்பார். (மா)

# “தஞ்சை பல்கலைக்கழகம் உலகத் தமிழரின் அறிவுக்கேந்திரம்”

## நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சந்திரசேகரம்

(யாழ்ப்பாணம்)

''தஞ்சையில் உதயமாகியுள்ள தமிழ்ப்பல்கலைக்கழகம் உலகத் தமிழ் மக்களின் அறிவுக்கேந்திரமாக, ஆராய்ச்சி நிறுவனமாக உலகில் வாழ் பிறநாட்டு அறிஞர்களின் அவைக்களமாக விளங்கும்.''

யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்விக் கழகத்தின் 'கலைஞானம்' சஞ்சிகை இரண்டாவது மலர் வெளியீட்டு விழாவில் கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் சந்திரசேகரம் தொடர்ந்து கூறியதாவது:

''கல்வியியலுக்கும், தமிழ் மொழிக்கும், சமய மரபுக்கும் தொன்றுதொட்டு இணக்கம் வளர்ந்து வந்துந்துள்ளது. இதுவே, நமது பண்பாட்டு, கலாச்சார மரபுக்குக் கிடைத்துள்ள தனிச்சிறப்பு என்றும் கொள்ளலாம்.

மக்கள் தமக்கு இனியனவற்றை, இன்பமானவற்றை, நல்லனவற்றை நாடும் இயல்பிணைப் பெற்றுள்ளனர். இவற்றை அடைந்து, அநுபவிக்க முயற்சியும் செய்யப்படுகிறது. இந்த விருப்பத்தினால் அழகியற்கலைகள் பலதோன்றி வளர்கின்றன.

அழகியற் கலைகளுக்குச் சமயக் கலை முக்கியம் ஆகின்றது. சைவஉலகில் சமயக்கலையின் வளர்ச்சி அன்பு நெறியாக வளர்ந்து வந்துள்ளது.

மக்களுக்குள்ள மற்றோர் இயல்பு மறைந்துள்ளவற்றைக் கண்டு அறிய விழையும் ஆர்வம் இதுவே ஆராய்வூக்கம் ஆகும். இந்த இயல்பூக்கம் இருப்பதினாலேயே அறிவியற் கலைகள் பல்கிப் பெருகுகின்றன.

அறிவியற்கலைகளின் எல்லைக் கோடியில் இருப்பது ஆன்மதத்துவ ஆராய்ச்சியான, மெய்யியற்கலையாகும்.

சைவமக்கள் வளர்த்தமெய்யியற் கலையின் உச்ச வளர்ச்சியே சைவசித்தாந்த நெறியாகும்.

எனவே, சைவசித்தாந்த நெறி, அழகியற்கலை, அன்பு நெறி, அறிவியற் கலைகள், மெய்யியற்கலை, ஆய்வுநோக்கு ஆகியவற்றைப் போற்றி வளர்த்த மரபாகும்.

மகாகவி பாரதியார் சுதேசியக் கல்விபற்றி 1906ம் ஆண்டில் எழுதும் போது, பூலோக சாத்திரம், உலக சாத்திரம், வானசாத்திரம், கணிதம் போன்ற சாத்திரங்கள் எல்லாம் சுதேசமொழிகளில் கற்று அறிந்து கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென விண்ணப்பம் விடுத்தார்கள். நவீன சாத்திரங்கள் என்று கொள்ளப்படுகின்ற இவற்றை பாரத நாட்டுப் பாரம்பரிய மரபினோடு இணைந்து கற்பிக்கப் படவேண்டும் என்று பாரதியார் கூறும் பொழுது, பாரதமரபில், தமிழ் மரபில இச் சாத்திரங்கள் இடம் பெற்றிருந்தன என்ற கருத்தும் பெறப்படுகிறது.

இளம் பல்கலைக் கழகமான நமது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இந் நாட்டுத் தமிழ் மக்களின் அறிவு பண்பாட்டுக் கலாச்சாரகேந்திர நிறுவனம் என்பதை நாம் மனதில்கொள்ளுதல் வேண்டும். யாழ்ப்பாணச் சமுதாயம் என்றும் கற்றுக் கொண்டிருக்கும் சமுதாயம் ஆகும்.

இப்பிரதேசத்துக்குநிறைந்த கீழைத்தேய, மேலைத்தேய, அறிவியல், தமிழ்ப் பாரம்பரியம் உண்டு.

மனிதனைக் கல்வி வயப்படுத்துவது அரியதொரு செயல்; ஆனல் அது கட்டாயமானது. ஒரு நாடு நியம அரசியல் விடுதலை பெறுவதனுல் மட்டும், ஆத்மீகவிடுதலை பெறமுடியாது. இதற்குக்கல்வி முக்கியமாகின்றது.

அறிவியல் சார்ந்த மனிதவியற்கோட்பாடு, நம் முன்னோர் அளித்த தத்துவச் செல்வங்களையும் பாரம்பரியத்தையும் பேணிக்காத்து, வேண்டுமாயின் அவற்றிற்குப் புத்தாக்கமும் அளிக்கவேண்டும். அத்தோடு வரலாற்றுப் பின்னணியை நோக்கி, உலகின் உண்மை நிலையை அறிந்து, பசுமைப்புரட்சியால் தாக்கம் பெறும் விவசாயி தொடக்கம் அணு-பொருள் அறிவியல் நிலைவரை அறிவைத்தேடுகின்றவர்கள் உட்பட, ஏற்றுக் கொள்ளக்கூடிய அறிவாகவும் விளங்குதல் வேண்டும்.''

## மொரீஷியஸ் பிரதமரின் இந்திய விஜயம்

புதுடில்லி, பெப், 8

மொரீஷியஸ் பிரதம மந்திரி ஆறுநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று இந்தியா வருகிறார்.

இவர் அங்கு பிரதமமந்திரி திருமதிஇந்திராகாந்தி, ஜனதிபதி திரு. ஸெயில் சிங் ஆகியோரைச் சந்தித்து சர்வதேச நிலைமை, புதுடில்லியில் நடைபெறவுள்ள மண்டலசார்பற்ற நாடுகளின் உச்சிமகாநாட்டில் எழக்கூடிய பிரச்சனைகள் ஆகியன குறித்து கலந்துரையாடவுள்ளார். (வெ)

வளைகுடா நாடுகள்:

## எண்ணெய்விலையை குறைத்து விற்பனையை அதிகரிக்கலாம்!

ஜெனிவா, பெப். 8

சவூதி அரேபியா உட்பட வளைகுடா நாடுகள் எண்ணெய் விலையைக் குறைத்து விற்பனையை அதிகரிக்கலாமென்று எண்ணெய் உற்பத்தி நாடுகளின் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நாடுகள் ஒருபீப்பா எண்ணெய்யின் விலையை 34 டாலர்களாகக் குறைக்கலாமென்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

சவூதி அரேபியா நாளொன்றுக்கு ஒருகோடிக்கும் அதிகமான பீப்பா எண்ணெய்யை உற்பத்திசெய்து வருகிறது.

வளைகுடா நாடுகள் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்காவிட்டால், இக்கட்டான நெருக்கடியை எதிர்நோக்க வேண்டுமென்று வெனிசூலா எண்ணெய்த்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (வெ)

## அகாலிகள் பிரச்னை பற்றிய பேச்சு வார்த்தை

புதுடில்லி, பெப். 8

அகாலிகள் பிரச்னைகள் குறித்து இந்திய மத்திய அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், அகாலிகளின் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையிலான முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் இன்று புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இப்பேச்சுவார்த்தையில் ஹரியாளு, பஞ்சாப், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (வெ)

பூம்புகார் கொலை வழக்கு:

## “சம்பவத்தை அயலவர் கண்டிருக்கலாம் அவர்கள் சாட்சிகளாக இல்லை”

(யாழ்ப்பாணம்)

சுகுமாருக்கு அடித்ததை நான் காணவில்லை. யேசுவுக்கு காயம் ஏற்பட்டது பற்றி எனக்கு இன்றுவரை தெரியாது.

அரியாலை பூம்புகார் கொலை வழக்கில் சாட்சியமளித்த சின்னத்தம்பி திருநாவுக்கரசு குறுக்கு விசாரணையின்போது மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நீதவான் வி. ஜெகசோதி முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 82 மார்ச் 2ம் தேதி பூம்புகாரில் சவரிமுத்து மோசஸ் என்பவரை கொலை செய்ததாக ம. தியாகராசா, ஐ. இரத்தினம், பொ. மகேந்திரன் அல்லது கட்டைசிங், பொ. குலேந்திரன் அல்லது செல்வம், ப. துரைசிங்கம், அல்லது செட்டி, ம. விஜயகுமார், அல்லது விஜயன், மா. மகேந்திரராஜா அல்லது பபி ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1ம், 2ம், 3ம், 5ம், 7ம், எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரட்ணம், சட்டத்தரணி ரி லிங்கராசாவின் அனுசரணையுடன் ஆஜரானுர். 4ம், 6ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ரி. லிங்கராஜா ஆஜரானுர். வழக்காளிதரப்பில சட்டத்தரணி ஆர். ரி. வினராஜா யாழ் பொலிஸாரின் உதவியுடன் ஆஜரானுர்.

திருநாவுக்கரசு குறுக்கு விசாரணையில் மேலும் கூறியதாவது: இறந்த யேசுவுக்கு நின்றவர்கள் எல்லாரும் தங்கினுர்கள். ஏறக்குறைய 10 அல்லது 12 பேர்வரை நின்றுர்கள். அந்த 10 அல்லது 12 பேரும் என்னைத்துரத்திக்கொண்டு வந்தார்கள்.

சட்டத்தரணி ஆர். பி. சபாரட்ணம் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: உம்மைத்துரத்தியவர்கள் மோசஸைக் கண்டதும் புறக்கணித்து விட்டார்களா?– ஆம். நான் பொலிஸுக்கு கொடுத்த முதலாம் வாக்குமூலத்தில மோசஸை என்ன ஆயுதங்களால், யார், யார் தாக்கினுர்கள் என்று கூறவில்லை. சுகுமார் ஆஸ்பத்திரியில் இருந்ததை 30ம் தேதி அறிந்தேன்.

சட்: சுகுமார் காயப்பட்டு ஆஸ்பத்திரியில் இருப்பதை நீர் ஏன் பொலிஸாருக்கு கூறவில்லை?–மௌனம்.

சட்: நீரும் யேசுவும் மோசசும் சுகுமாரும் இராசேந்திரத்துக்கு சயிக்கில் செயின், பொல்லு, இரும்புக்கம்பி ஆகிய ஆயுதங்களால் காயம் விளைவித்தீர்கள்?–இல்லை. அயலவர்களான மகாதேவா, ஜெயகுமார், சின்னத்தம்பி ஆகியோர் இச்சம்பவத்தை கண்டிருப்பார்கள். அவர்கள் சாட்சிகளாக இல்லை.

4ம், 5ம் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரி. லிங்கராஜா குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: 28ம் தேதி கடையில் வியாபாரம்செய்தீரா?–இல்லை.

சட்: வாக்குமூலத்தில் 300 ரூபா என்று எப்படி சொன்னீர்?–கடையிலிருந்த 300 ரூபாவைக் காணவில்லை. கடையில் பலசரக்கு வியாபாரம் செய்தேன்.

சட்: மண்வெட்டிவிற்பதா?–இல்லை. வீட்டில் கட்டிலுக்குப் பக்கத்தில் மண்வெட்டிப்பிடி இருந்தது.

மேல்விசாரணை இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது. [க]

# அவசியமின்றி வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டாம்!

## அமைச்சர்களுக்குஇந்திராஆலோசனை!

புதுடில்லி, பெப். 8

அவசியமில்லாது வெளிநாட்டுப்பயணங்களை மேற்கொள்ள வேண்டாமென்று இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி தனதுசகஅமைச்சர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

எளிமையாக நடந்துகொள்ளுமாறும், ஆடம்பரச் செலவுகளைத் தவிர்க்குமாறும் அவர் அமைச்சர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளார். பொதுமக்களும் இதனைக் கடைப்பிடிப்பார்களென்று அவர்நம்பிக்கைதெரிவித்தார்.

திருமதி இந்திராகாந்திநாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும் பொருட்டு அனுபவம் வாய்ந்த பொருளாதார நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றை அமைக்கவும் தீர்மானித்துள்ளார்.

மாநிலங்களில் 20 அம்சத் திட்டத்தை அமுல்படுத்தும் நடவடிக்கைகளையும் அவர் தீவிரமாக மேற்கொண்டுள்ளார். (வெ)

### மணிவாக்கு

அளவுக்கு மிஞ்சிய செல்வம்
அனுவசிய செலவுக்கே உதவுகிறது

— தோரோ

## நமது நோக்கு

# உண்ணு விரதம் நல்ல முடிவு

கடந்த ஏழு நாட்களாக யாழ். பல்கலைக்கழக மாணவர் நடத்திய உண்ணு விரதப் போராட்டம் முடிவடைந்தது ஒருநல்ல செய்தி.

பல்கலைக்கழக மாணவர்களின் பொறுப்பு இன்று எங்கும் மிகப் பெரியதாகி விட்டது. அவர்களுடைய முக்கிய கடமை கல்வி பயில்வதே! அதற்கு இன்று பல இடர்கள் நேருவதை நாம் நேரிற்காண்கின்றோம்.

இவற்றைச் சமாளித்து தாங்கள் தேர்ந்தெடுத்த துறையில் படிப்பைமுடித்து வெளியேறுவதே முதன்மையாகக் கொள்ளவேண்டும்.

பெற்றோரும் மற்றோரும் முழுச்சமூகமுமே இதனைத்தான் கட்டாயமாக எதிர்பார்க்கிறது.

இதனை மேம்படுத்தி, வற்புறுத்தும் போது இன்னொரு பெரும் பொறுப்பைச் சமூகம் உணரத் தவறுகிறது. காரணம், வளர்ந்தோர் உலகம் இன்றைய இளைஞர் உலகத்தின் உற்சாகத்தை உணர முடியாதிருப்பதே.

இன்றைய மாணவர் இதயத்தில் உற்சாகம் கிளம்பிவிட்டால், அதைக் கட்டுப்படுத்துவதென்பது அவ்வளவு எளிதன்று. காற்றைக் கட்டுப்படுத்துவது அதனிலும் எளிதென்று சொல்லலாம். இளங்கன்றுகள் தானே அவர்கள்! பின்விளைவுகளைக் கருதாமல், காரியத்தைச் செய்துவிடுவது இயல்பு.

இதனை உணர்ந்த யாழ். பல்கலைக்கழக வேந்தரும், உபவேந்தரும் மாணவர் அவைத்தலைவரை அழைத்து நடத்திய பேச்சின் பயனாக உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் அளிக்கும் முடிவு இதுவாகும்.

மாணவர்கள் கட்டுப்பாடு பற்றி அதிகம் பேசப்பட்டு வருகிறது. கட்டுப்பாடு இல்லையேல் எந்தப் பாடசாலையோ பல்கலைக்கழகமோ நடைபெறாது. இது எல்லோருக்கும் தெரிந்த, எக்காலத்துக்கும்உண்மையான கருத்து.

இதனை இன்று விளக்குவதில் சிரமம் உண்டென்பதையே நாம் வற்புறுத்துகின்றோம்.

மாணவர்கள் சகல அம்சங்களிலும் வளர்ச்சி பெறுவதற்குத் தடங்கலானத் தடைகளை ஏற்படுத்தக் கூடாது. இப்படி ஏற்படுத்தும் தடைகளைக் கட்டுப்பாடென்று மதிக்க இடமில்லை.

மாணவர்கள் என்னசெய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள்என்று உளவு பார்க்கும்கூட்டம் ஒன்று மாணவ போர்வையில் அரசியல் சார்புடையதாகவிருந்ததால் நாட்டின் பல்கலைக்கழகங்களில் குழப்பம் ஏற்பட்டதும் வன்செயல்கள் இடம்பெற்றதும் இரகசியங்களே.

உண்மை என்னவென்றால் சமூக நலனுக்கு விரோதமான மனப்பாங்கு அமைந்துள்ள அரசியல் முறையில் சிக்குண்டு எங்கள் மாணவர்கள் தத்தளிக்கின்றனர். இந்த மனப்பாங்கு வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும் மிக நுட்பமான முறையில் இருந்து வந்திருக்கிறது.

இதனை வெளிப்படுத்தும் சம்பவங்கள் திடீர் திடீரென நடைபெற்றதும் கல்லூரி மாணவர்கள் களங்கங்கட்டுவதை எவ்வாறு கண்டிக்க முடியும்? அதுவும் அமைதியாகவும் ஒழுங்காகவும் எதிர்ப்புத் தெரிவிப்பதானால் அதற்கு மாற்று மருந்து சமாதான முறையில் தயாரிக்கப்படவேண்டியது. உண்ணாவிரதம் சிறுபிள்ளை விளையாட்டல்லவென்பது உணர்தற்குரியது.

தங்கள் சகாக்கள், ஆசிரியர்கள் தங்கள் அபிப்பிராயத்தின்படி ஒரு கொடிய சட்டத்துக்குப் பலியாகி தடுப்புக்காவலில் அவஸ்தைப்படுவதை எதிர்ப்பது தேசிய உணர்ச்சி என்று சொல்வது தவறில்லை. அது போற்றத்தகுந்த குணமென்பதை நாம் மறுக்கத் தயாரில்லை.

நமது பாடசாலைகளும் கல்லூரிகளும், நம்மை அடிமைகளாகவும், கோழைகளாகவும், சந்தேகப் பிராணிகளாகவும், உறுதியற்றவர்களாகவும் ஆக்கவா நிறுவப்பட்டவை?

கல்வி நிலையங்கள் நம்மை மனிதர்கள் ஆக்குவதற்கு ஏற்பட்டவை; மனிதத் தன்மை என்பது வெறும் பயமுறுத்தலிலும், அசட்டுத்தைரியத்திலும், அடாபிடித்தனத்திலும் இல்லை.

சமூக விடயமோ, அரசியல் விடயமோ, வேறெந்த விடயமோ, நியாயமான காரியத்தை அஞ்சாமல் செய்து அதனால் விளையும் பயனை ஏற்கச் சித்தமாயிருப்பதே மனிதத் தன்மை.

வெறும் ஆர்ப்பாட்டங்கள் சரமாரியானபிரசங்கங்கள் அந்தந்தக் காலங்களில் நடத்துவதே எமக்குத் தெரிந்த காரியம் என்று நம்மைப் பிறர் அடிக்கடி ஏளனம் பண்ணுவதுண்டு.

இந்தக் குற்றச்சாட்டு உண்மையில்லை என்பதை நிரூபிக்க இளைஞர் உலகத்துக்கு அருமையான சந்தர்ப்பங்கள் உண்டு.

இன்று குறிப்பாக வட பகுதியில் ஒரு கொந்தளிப்பான காலம். தெற்கில் குதூகலம்; இங்கு கறுப்புக் கொடி என்று இரண்டு துண்டுகளாக வெட்டி விடுவது தவறு. இங்குள்ள கொந்தளிப்பு அடக்குமுறைகளால் ஏற்பட்டது. தேசிய உணர்வில் வடக்குத் தெற்கென்று கோடு போடுதல் சரியாகாது.

இன்றைய கொந்தளிப்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் சமாதான முறைக்கு மதிப்பளித்தது போற்றத்தகுந்தது.

## இன்று அமரர் ஜி. ஜி.யின் நினைவுதினம்

# ‘தமிழ்ஈழ லட்சியம் அவரின் இதயத்தின் அடித்தளத்தில் இருந்தது’

வீரர் கோட்டமாம் வடமராட்சி மண்ணில் தோன்றிய வானத்து அமரர்ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் ஆறுவது நினைவு தினம் இன்றாகும். தமிழ்க்குலம் வாழ, தமிழ் மணிசிறக்க, தமிழன்னையின் அருந்தவத்தால் தோன்றிய பெரியார் பொன்னம்பலம் அவர்களின் சாதனைகள் தமிழர் சரித்திரத்தில் புகழ்மிக்க பகுதிகளாகும்.

தமிழ்மீதும் தமிழ் மண்மீதும் கொண்ட வற்றாத பாசத்தால் இளம்வயதிலேயே தமிழினத்திற்குச் சேவைசெய்ய முன் வந்தார்அரைநூற்றாண்டு காலம் அரசியல் பணிபுரிந்த வாழவேண்டுமானால் தமிழர் பூமி பொருளாதாரத்துறையில் தலைநிமிர்ந்து நிற்க வேண்டும். எதிர்காலத்தில்உருவாகப்போகும் தமிழ் ஈழம் தன்னிறைவுபெற்ற ஒன்றாக விளங்கவேண்டும் என்பதற்காக தீர்க்க தரிசனத்துடன் திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றியவர். தமிழினத்தை வாழவைத்தவர் பெரியார் பொன்னம்பலம் ஒருவரே.

வடக்குத் தமிழ் மண்ணில் காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலையையும், பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலையையும், கிழக்குத் தமிழ் மண்ணில் வாழைச்சேனையில்

**தி. மகேந்திரராஜா**
(துணைச்செயலாளர். அ. இ. தமிழ்க்காங்கிரஸ்)

அரசியல் மாமேதை அவர், சந்தனத்திலகம் நெற்றியில் துலங்கத் தமிழ்மண்ணெங்கும் பவனிவந்த தனிப்பெருந்தலைவர் அவர்.

சேர். பொன். இராமநாதப் பெரியாரின் பின் தமிழ்ச் சமுதாயத்தை வழிநடத்தும் பெரும் பொறுப்பு இளம் வயதிலேயே பொன்னம்பலத்தின் தோள்களில் சுமத்தப்பட்டது.

### 14 மணிநேரம் ஆற்றிய உரை

சட்டசபைப் பகிஷ்கரிப்பைக் கைவிடச் செய்ததன் மூலம் தமிழினத்தின் நலனைக்காத்து நல்வழிகாட்டியவர் இளம் பொன்னம்பலமே. தமிழினத்திற்குப் பெரும் பாதகமாக அமைந்த சேர் அன்று கொலிடி கோட்டின் சிபார்சுகளை எதிர்த்துச் சட்டசபையில் 14 மணித்தியாலங்கள் அவர் ஆற்றிய உரை உலகப்பிரசித்தி பெற்ற ஒன்றாகும்.

தமிழினத்தின் நலனைக் காப்பதிலேயே அவர் குறியாக இருந்தார். சோர்ந்து நின்ற தமிழனுடைய உள்ளத்திலே, சோர்வு போக்கி வீர உணர்ச்சியை ஊட்டிய உத்தமர். தாழ்ந்து நின்ற தமிழனுக்குத் தன்னம்பிக்கையைத் தந்தவர் தமிழ் உணர்ச்சியை, தளர்ந்தவர் பெரியார் பொன்னம்பலம் ‘‘தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்துநில்லடா’’ என்று சொல்லித் தமிழ் இனத்தைதத் தட்டி எழுப்பியவர், தூங்கிய தமிழனைத் தடித்தெழவைத்து இன நலம் காக்க உழைத்திட வைத்தவர்.

### மலையகத்தவரின் இரட்சகர்

இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்களின் உண்மையான இரட்சகராக விளங்கியவர் தமிழர் தலைவர் ஜீ. ஜீ பொன்னம்பலம் ஒருவரே. இலங்கையைத் தமது தாயகமாகக் கொண்ட இலட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள் வஞ்சிக்கப்படவும் வாக்குரிமை இழக்கவும் தமது பிரதிநிதித்துவத்தை இழக்கவும் காரணமாக அமைந்தது 1948ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலங்கைப் பிரசாஉரிமைச்சட்ட மசோதாவாகும்.

பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைத்திட இழந்துபோன அவர்களின் பிரசாஉரிமையை மீட்டிட இராஜதந்திர முயற்சிகளில் ஜீ. ஜீ முழு மூச்சாக ஈடுபட்டார். அவரின் முழு விருப்பத்தையும் நிறைவேற்றப் போதியதாக இல்லாவிடினும் கூட லட்சக்கணக்கான மலையக மக்கள் மீண்டும் பிரசாஉரிமை பெறத்தக்க வகையில், இந்திய பாகிஸ்தானிய பிரஜா உரிமை மசோதா பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

தமிழினம் சுதந்திரமாக வாழவேண்டுமானால் ... காகிதத் தொழிற்சாலையையும் நிறுவிய செயல் வீரர் புல்மோட்டையில் இல்மனைற் தொழிற்சாலையும் உருவாவதற்கு வித்திட்டவரும் இப்பெருமகனே.

நாடாளும் அவையில் தமிழ் முழக்கம் எழுப்பிய முதல் தமிழன் தமிழ்ப்பற்றுளன் தன்னிகரில்லாத் தலைவர் ஜீ. ஜீ.

தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து நாடாளும்அவையில் சிம்மகர்ச்சனைபுரிந்த முதல் தமிழன் என்ற பெருமையைத் தட்டிக்கொண்டவர் பேரறிஞர் ஜீ. ஜீ.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என உலகமன்றில் சங்கத் தமிழ் முழங்கித் தங்கத் தமிழன் இறைப்பைத் தமிழன் பெருமையை உலகில் நிலைநாட்டிய சாதனையாளன் சரித்திர புருஷர் ஜீ. ஜீ.

உலகை விளக்கவைக்கும் ஸ்கொட்லன்யாட் நிபுணர்களையே திகைக்க வைத்து துப்புதுலக்கும் துறையில் கைரேகைகளைப் பதியும்முறையில் மாற்றம் ஏற்படுத்திய பெறற்கரும் புகழ்பெற்ற பெருமைக்குரிய அமரர் ஜீ. ஜீ.

புரட்சிச்சதி வழக்கில் புன்னகை பூத்த முகத்தினனாகத் தோன்றி ஆட்சியாளருக்குப் பெருஞ்சவாலாக விளங்கியவர் ஜீ. ஜீ.

திசையெங்கும் தேடியும் கண்டுபிடிக்க முடியாத கடற்படைத்தளபதி றொய்ன் டீமெல்லை நீதிமன்றத்தில் நிறுத்தி உலகை ஆச்சரியப் படவைத்தவர்.

### கோவிந்தன் வழக்கு

முல்லேரியா தோட்டத்தில் கோவிந்தன் என்ற மலையகத் தமிழ்த் தொழிலாளி அநியாயமாக பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்ட போது இன உணர்வு காரணமாக நீதிக்காகப்போராடியவர் பொன்னம்பலம்.

வல்வெட்டித்துறையில் சிவஞானசுந்தரம் என்ற தமிழ் இளைஞர் பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டபோது அந்தத் தமிழன் சாவுக்கு நீதிகேட்டு நீதிமன்றத்தில் வாதாடியவர் பொன்னம்பலம். இனத்திற்கு ஆற்றும் தொண்டாகக் கருதியே அவர் இந்தகைய வழக்குகளில் நீதிமன்றங்களில் தோன்றி வாதாடினார் என்பதைத் தமிழினம் மறந்துவிட முடியாது.

ஆழ்கடலில் முத்தெடுப்பதைப்போல் சுதந்திரத் தமிழ் ஈழ இலட்சியம் அவர் இதயத்தின் அடித்தளத்தில் எப்போதும் இருந்து வந்திருக்கிறது. தமிழினத்தின் தனித்துவத்தைக்காக்கவும் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்கவும் பாடுபட்டுவந்த தனிப்பெருந்தலைவர் ஜீ ஜீ.

ட்ரயல் அற்பார் வழக்கில் தனது இறுதி உரையின்போது இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்தது போல்இங்கும் ஏற்படும் என்றும் தமிழர்கள் பிரிந்துவாழ வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டனர் என்றும் தமிழ்ஈழ இலட்சியத்தைத் தான்ஆதரிப்பதாகவும்உரிமை முழக்கம் செய்தவர் ஜீ ஜீ.

கோழையையும் வீரனாக்கும் அவர் வீரத்திருமேனி பாயும் பகையும் கலங்க வைக்கும் அவர் திருப்பெயர் சாயும் நீதியையும் விழவிடாது நிறுத்தும் அவர் சட்டவாதத்திறன் துரோகியையும் திருத்தும் அவர் வீரமொழி இவற்றை இனிநாம் காணமுடியாது. கலங்கித்தவிக்கும் தமிழினத்தைக் காத்துநின்ற கவசம் ஜீ. ஜீ.

சுதந்திரம், சுயமரியாதை, சுபீட்சம் இதுவே நன்றிகளில்லாத தமிழர் தலைவர், அரசியல் மாமேதை ஜீ ஜீ.யின் தாரக மந்திரம். இதனை மறவாது செயல்படுவதே நாம் அவருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.

# ‘‘கரணவாய் குருபீடம் பெருமைமிக்கது’’

## திட்டமிடல் அதிகாரி பாராட்டு

(யாழ்ப்பாணம்)

‘‘சேர் பொன் இராமநாதன் முதல் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வரையான அறிஞர் பெருமக்கள், கரணவாய் குருபீடத்தைச் சேர்ந்த குருமாரையும் அவர்களது அறிவு-ஒழுக்கங்களையும் நன்கு மதித்துள்ளார்கள்’’.

இவ்வாறு யாழ் திட்டமிடல் அதிகாரி திரு. வி. செ. சுவாமிநாதன் கரணவாய் வேதாரண்யேஸ்வரர் படிப்பகத்தின் கால்கோள் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

படிப்பகக் கால்கோள்விழாவும் கரணவாய் வேதாரண்யேஸ்வரர் சனசமூக நிலைய ஆண்டுவிழாவும் பண்டிதர் கை. நமசிவாய குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

யாழ் திட்டமிடல் அதிகாரி திரு.சுவாமிநாதன்தொடர்ந்து பேசுகையில் ‘‘வரணி ஆதீனம் என்றழைக்கப்படும்கரணவாய் குருமார் சமூகத்தின் தேவைகளுக்கேற்ப எடுக்கவேண்டிய பொறுப்புக்கள் பற்றித் தெரிவித்துடன் சனசமூக நிலையங்கள் தமது தேவைகளை நிறைவேற்றப் பாடுபடும்அதே வேளையில் அயலிலுள்ள சனசமூக நிலையங்களுடன்சேர்ந்து பரஸ்பரம் ஒரு சங்கத்திற்கு மற்றச்சங்கம் உதவி புரிந்தும் சமூகத்தை மேம்படுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கரணவாய் குருகுலத்தின் இயக்குநர் சிவஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் வரணி வேதாரண்யேஸ்வரர் ஆதீனதர்மகர்த்தாசபைச்செயலாளர் சிவஸ்ரீ வே. கனகசபை பண்டாரசந்நிதி, வேதாரண்யேஸ்வர வித்தியாலய அதிபர் சொ. நடராஜகுரு ஆகியோர் வாழ்த்துரை வழங்கி உரையாற்றினர்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தரிவு செய்யப்பட்

(5-ம் பக்கம் பார்க்க)

# “தங்கப்பதக்கம் படத்தில் சிவாஜியின் நடிப்பைப் பார்த்திருக்கிறீரா?”

## நீர்வேலி கொள்ளை வழக்கில் ஏ. எஸ். பி.யிடம் சட்டத்தரணி கேள்வி

[இ. கந்தசாமி]

தங்கப்பதக்கம் படத்தில் சிவாஜி கணேசன் நடிப்பைப் பார்த்தீரா? உம்மை ஒரு சிறந்த நடிகராகக் கருதுகிறீரா? என்று நீர்வேலி வங்கிக் கொள்ளை வழக்கு எதிரிகளின் சிரேஷ்ட சட்டத்தரணி சத்தியேந்திரா சாட்சியான ஏ. எஸ் பி. பத்மநாதன் கனகசிங்கத்திடம் கேட்டார்.

அதற்கு பதிலளித்த ஏ. எஸ் பி. கனகசிங்கம் படம் பார்த்தேன். என்னை எப்போதும் ஒரு பொலிஸ் அதிகாரியாகவே கருதுகிறேன்– நடிகனாகவல்ல என்றார்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை கொலைவழக்கு ‘வொயர்டயர்’ விசாரணை கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நீதிபதி சி. எல். ரி. மூனமலே முன்னிலையில் நடைபெற்று வருகின்றது தெரிந்ததே. இவ்வழக்கில் அரசதரப்பு சாட்சிகளில் ஒருவராக அழைக்கப்பட்ட ஏ எஸ்.பி. பத்மநாதன் கனகசிங்கம் எதிர்தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி திரு. சத்தியேந்திராவால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

சத்தியேந்திரா: 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி ஆனையிறவுக்குச் சென்றீரா?

சா: இல்லை, நான்போகவில்லை.

சத்: ஆனையிறவை உமக்குப் பிடிக்காதா?

சா; ஆனையிறவை ஒரு மாற்றத்திற்காகவே விரும்புவேன்.

சத்: மாற்றத்துக்காக ஆனையிறவு இராணுவ முகாமை விரும்புவீரா?

சா: நான் என்றுமே ஆனையிறவு சென்றதில்லை. அதனால் எனக்கு அதுபற்றித் தெரியாது. எனினும் அந்தப் பகுதியை விரும்புகிறேன்.

சத்: அது நல்ல பகுதியா?

சா: ஆம். கடல் இருக்கிறது அங்கு கடல் காற்று நன்றாக வீசும். அதனால் நான் அதை விரும்புகிறேன்.

சத்: கடற்காற்று வீசும் நல்ல இடம் என்பதால்தான் ஏப்ரல் மாதம் 16ம் திகதி செல்வராஜா யோகச்சந்திரனையும், நடராஜா தங்கவேலுவையும் ஆனையிறவுக்கு அனுபத் தீர்மானித்தீர்கள்?

சா: அவர்களை அன்று அங்கு அனுப்புவதற்கு தீர்மானித்தது நான் அல்ல. ஏன் அனுப்பினார்கள் என்றும் எனக்குத் தெரியாது.

சா: ஆம்.

சத்: நீர் ஒரு விசுவாசமுள்ள கடமையுணர்வுள்ள பொலிஸ் அதிகாரி என்று நினைக்கிறீரா? அல்லது உம்மைப்பற்றி பேச விரும்பவில்லையா?

சா: என்னை விசுவாசமுள்ள கடமையுணர்வுள்ள பொலிஸ் அதிகாரி என்றே கூறுவேன்.

### தமிழ்த்திரைப்படம்

சத்: தமிழ்த் திரைப்படங்களைநீர் அதிகம்பார்ப்பதுண்டா?

சா: என்ன படம் காண்பிக்கப்படுகிறது என்பதைப் ஆனையிறவு முகாமுக்கு அனிப்பிவைத்தீர்கள்?

சா: எனக்குத் தெரியாது.

சத்: எதிரிகள் ஆனையிறவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது குறித்து எப்போது தெரிந்து கொண்டீர்?

சா: நான் ஏப்ரல் 16–ம் திகதி பொதுவாக எனது கடமையில் ஈடுபட்டேன். அதனால் இதுபற்றி அக்கறை எடுக்கவில்லை.

சத்: யார் உம்மை வழமையான கடமை ஏற்குமாறு பணித்தது?

சா: எனது மேலதிகாரியான அத்தியட்சகர் அழைத்

பட்டது.

சா: அப்போது கொழும்பு தெற்கில் 8 பொலிஸ் நிலையங்களில் மேற்பார்வைக்குப் பொறுப்பாக இருந்தேன். அதற்காக நான் அழைக்கப்பட்டேன்.

சத்: திரு. கனகசிங்கம் நீர்வேலி வங்கிக்கொள்ளை தொடர்பான விசாரணையை ஏப்ரல் 7–ம் திகதி பாரம் எடுத்த சமயம் நீர் மிகவிரைவில் அதாவது ஒரு கிழமைக்குள் இதை முடிக்கலாம் என நினைத்தீரா?

சா: ஒரு நாள், ஒரு மாதம் பல வருடம் செல்லலாம் என எண்ணினேன். அத்தியட்சகர் என்னைவிட மிகச் சிரேஷ்ட அதிகாரி அவருக்கு என்னைவிட அதிகம் தெரிந்திருக்கும்.

## ‘நான் ஒரு பொலிஸ் அதிகாரி நடிகன் அல்ல’

சத்: ஏப்ரல் மாதம் 7ம் திகதி நீர்வேலி வங்கிக் கொள்ளை கொலைபற்றி விசாரிக்கும் சி. ஐ. டி. யினருக்கு உம்மை நியமித்தார் என்று கூறினீர்கள்?

சா: ஆம்.

சத்: சி ஐ டி. அதிபராக உம்மை நியமித்தார்?

சா: முதலில் பொலிஸ் மா அதிபரைச் சந்திக்குமாறு பணித்தார்.

சத்: திரு. கனசிங்கம், நீர்வேலி வங்கிக் கொள்ளை பற்றி விசாரணை செய்யுமாறு உம்மை நியமித்தது யார்?

### விசுவாசமுள்ள அதிகாரி

சா: சி.ஐ டி.அதிபர்

சத்: இதுதான் நான் முதலில் கேட்டகேள்வி உம்மை ஏப்ரல் 7ம் திகதி நீர்வேலி வங்கிக் கொள்ளை விசாரணையைப்பெறுப்பேற்கும்படி நியமித்தது சி. ஐ.டி. அதிபர் சரியா?

பொறுத்தது.

சத்: ‘தங்கப்பதக்கம்’ படத்தில் சிவாஜி கணேசனின் நடிப்பைப் பார்த்திருக்கிறீரா?

சா: ஆம் பார்த்தேன்.

சத்: உம்மை ஒரு சிறந்த நடிகன் என நீர் கருதுகிறீரா? அல்லது உம்மைப் பற்றிப் பேச விருப்பமில்லையா?

சா: நான் எப்போதும் என்னைப் பொலிஸ் அதிகாரி என்றே கருதுகிறேன்; நடிகனாக அல்ல.

சத்: 81–ம் ஆண்டு ஏப்ரலில் இராணுவ ஆஸ்பத்திரிக்கு ஒரு பொலிஸ் அதிகாரியாகச் சென்றீர்?

சா: ஆம்.

சத்: எப்போது அங்கு சென்றீர்?

சா: ஏப். 8, 9–ம் திகதிகளில் சென்றேன்.

சத்: 16–ம் திகதி பனாகொடை இராணுவ முகாம் சென்றீரா?

சா: நான் போகவில்லை.

சத்: எதிரிகளை எப்போது

தாரி.

சத்: அவசர வேலை இருந்ததாலா உமது அத்தியட்சகருக்கு உமது சேவைதேவைப்

# ‘குட்டிமணி தமது வாக்குமூலம் சரியென ஏற்றுக்கொண்டார்’

## ஏ. எஸ். பி. கனகசிங்கம் சாட்சியம்

(கொழும்பு)

“பனாகொடை ராணுவமுகாமில் வைத்து 2ம் எதிரி செல்வராஜா யோகச்சந்திரனின் (குட்டிமணி) வாக்குமூலத்தைப் பதிவுசெய்தேன். பதிவு முடிந்ததும் தமதுவாக்குமூலம் சரியென ஏற்றுக்கொண்டு அதில் கையெழுத்திட்டார்”

இவ்வாறு நீர்வேலிகொள்ளை கொலை வழக்கு ‘வொயர்டயர்’ விசாரணையில் சாட்சியமளித்த ஏ. எஸ். பி.பத்மநாதன் கனகசிங்கம் கூறினார். இவரது சாட்சியத்தை பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திரு. சுனில்டி சில்வா நெறிப்படுத்தினார்.

சாட்சி கூறியதாவது:

1981 ஏப்ரலில் நான் கொழும்பில் உதவிப்பொலிஸ் அதிபராகக் கடமையாற்றினேன். நீர்வேலிவங்கிக்கொள்ளை, கொலை வழக்கு புலன்விசாரணைகளில் சி. ஐ. டி. பகுதியினருக்கு உதவுமாறு பொலிஸ்மா அதிபர் எனக்கு உத்தரவிட்டார். அந்த உத்தரவுக்கு அமைய விசாரணை நடத்தினேன்.

பனாகொடை இராணுவமுகாமில் வைத்து இவ்வழக்கின் 2ம் எதிரியான செல்வராஜா யோகச்சந்திரனின் (குட்டிமணி) வாக்குமூலத்தைப்பதிவு செய்யஆரம்பித்தேன். வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டபின் தமது வாக்குமூலம் சரியென ஏற்றுக்கொண்டு அதில் கையெழுத்திட்டார். அந்த வாக்குமூலத்தை அவர் தன்னிச்சையாகவே தந்தார்.

சுனில்: இந்த வாக்குமூலத்தைத் தந்தால் ஏதாவது நன்மைசெய்வதாக வாக்குறுதி அளித்தீரா?

சா: இல்லை.

சுனில்: 2ம் எதிரியைத் தாக்கினீரா?

சா: இல்லை

சுனில்: உமது முன்னிலையில் யாராவது தாக்கினார்களா?

சா: இல்லை.

சுனில்: ஏனைய 4எதிரிகளைத் தாக்கினீரா?

சா: இல்லை.

சுனில்: உமது முன்னிலையில் யாராவது அந்த எதிரிகளைத் தாக்கினார்களா?

சா: இல்லை

சுனில்: யாராவது தம்மைத் தாக்கியதாக 2ம் எதிரி உம்மிடம் புகார் செய்தாரா?

சா: இல்லை

சுனில்: வேறுயாராவது தாக்கியதாக மற்ற எதிரிகள் புகார் செய்தார்களா?

சா: இல்லை.

சுனில்: 2ம் எதிரியிடம் கதைத்த சந்தர்ப்பங்களில் அவரை யாராவது தாக்கிய அடையாளங்களைக் கண்டு கொண்டீரா?

சா: இல்லை.

சுனில்: 2ம் எதிரியான யோகச்சந்திரனிடம் (குட்டிமணி)வாக்குமூலம்பெறயாரிடமாவது உதவிபெற்றீரா?

சா; இன்ஸ்பெக்டர் தங்கவேலு, சார்ஜண்ட் சமரசிங்க ஆகியோரின் உதவிகளைப்பெற்றுக்கொண்டேன்.

சுனில்: வாக்குமூலம் என்ன மொழியில் ‘டைப்’ செய்யப்பட்டது–

சா: ஆங்கிலத்தில்.

சுனில்: என்ன மொழியில் கேள்வி கேட்டீர்?

சா: 2ம் எதிரியிடம் தமிழில் கேள்விகேட்டு டைப்செய்தவரிடம் ஆங்கிலத்தில் கூறினேன். 2ம் எதிரி கூறியதை நானே தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்து டைப் செய்தவரிடம் கூறினேன். [இ]

## யாருடைய தாலிக்கொடி?

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த திரு எஸ். வி ஞானப்பிரகாசம் என்பவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் கண்டெடுத்த தாலிக் கொடியினை ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## யோகபுரம் வீடமைப்புத்திட்டம்: 75 குடும்பங்கள் வீடுகளைப் பெறவுள்ளன

(புலோலி)

சீவல் தொழிலாளர் குடும்பங்களுக்கெனப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் பணிப்பின்பேரில் அமைக்கப்பட்டுள்ள யோகபுரம் வீடமைப்புத்திட்டத்தில் 75 குடும்பங்கள் வீடுகளைப் பெறவுள்ளன.

இவ் வீடமைப்புத் திட்டத்திற்கென கோப்பாய்த் தொகுதியில் தெரிந்து எடுக்கப்பட்டுள்ள காணியில் ஏற்கனவே குடியிருக்கும் 58 குடும்பங்களுடன் மேலும் 17 குடும்பங்களின் பெயரையும் கோப்பாய் எம். பி திரு. எம். ஆலாலசுந்தரம் சிபார்சுசெய்துள்ளார்.

இந்த வீடமைப்புத்திட்டத்திற்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் பதினைந்தாம் திகதி கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெறும் என்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை யாழ் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இலங்கை பனம்பொருள் அபிவிருத்திசபைத் தலைவரும் வடமாகாண தெங்கு–பனம் பொருள் கூட்டுறவு சமாஜச் செயலாளருமான திரு. கே. நடராசாவின் ஆலோசனையுடனேயே இச்சீவல் தொழிலாளர் குடும்பங்களுக்கான வீடமைப்புத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு பிரதமர் உத்தரவிட்டிருந்தார். (வெ)

## யாழ். நகரில் அனுரா

யாழ்ப்பாணம்)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகரும், முன்னாள் பிரதமர்களான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தம்பதிகளின் புத்திரருமான திரு. அனுரா பண்டாரநாயக்கா தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்து திரும்பினார்.

திரு பண்டாரநாயக்கா கடந்த 5ம் திகதி இங்கு வந்து காங்கேசன்துறை விருந்தினர் விடுதியில் தங்கியிருந்துவிட்டு 7ம் திகதி கொழும்பு திரும்பியதாகக் கூறப்படுகின்றது. அவரது விஜயம் அரசியல் நோக்கம் கொண்டதாக இருக்கவில்லையென்றும், கட்சி பிரமுகர்களுக்குக்கூட தெரிந்திருக்கவில்லையென்றும் அறியப்படுகின்றது. (மாவை–நி)

## கரணவாய்...

(4–ம் பக்கத் தொடர்ச்சி)

டனர்.

தலைவர்: சிவஸ்ரீ ச. சட்டநாதக்குருக்கள், உபதலைவர்: சுபசபாநாதசர்மா, செயலாளர்: வ. ஈசன், துணைச்செயலாளர்: சு விசுவநாதன், பொருளாளர்: சபா. கணநாதன், பத்திரிகை ஆசிரியர் வி யோகலிங்கம், போஷகர்கள்: யாழ் மாவட்ட திட்டமிடல் அதிகாரி திரு வி. செ சுவாமிநாதன், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு கே. இரத்தினசிங்கம்.

## பலாலியில் அனுமதிபெற்ற ஆசிரியர்கள்

(மயிலிட்டி)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இவ்வாண்டில் 231 ஆசிரிய மாணவர்கள் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக அனுமதி பெற்றுள்ளனர். கணிதப் பிரிவிலே மிகக்கூடுதலான ஆசிரிய மாணவர்களும், உடற்கல்விப் பிரிவில் மிகக் குறைந்த ஆசிரிய மாணவர்களும் அடங்குகின்றனர்.

விபரங்கள் வருமாறு:

கணித பிரிவு 71 பேர். விஞ்ஞானப் பிரிவு 48 பேர். விவசாயம் 24 பேர் சமயம் 12 பேர். ஆங்கிலம் 67 பேர். உடற்கல்வி 9 பேர். (மா)

இருல் பிடிப்பதில் ஏற்பட்ட தகராறு:

# 5 மீன்வாடிகள் தீக்கிரை பலருக்குக் கத்திவெட்டு

## முல்லைத்தீவுக் கடற்கரையில் சுதந்திரதினத்தில் சம்பவம்

(வவனியா)

உள்ளூர் மீனவர்களுக்கும் வெளியூர் மீனவர்களுக்கும் இருல் பிடிப்பதில் ஏற்பட்ட பிரச்சினையின் எதிரொலியாக ஐந்து மீன்வாடிகள் தீக்கிரையானதுடன் பலர் வெட்டுக் காயங்களுக்குள்ளாகினர்.

இச் சம்பவம் சுதந்திரதினத்தன்று முல்லைத்தீவு கடற்கரையில் நடந்துள்ளது.

முல்லைத்தீவிலுள்ள மீனவர்களுக்கும், வெளியூர்களில் இருந்து இங்கு வந்து மீன்பிடிப்பதில் ஈடுபட்ட மீனவர்களுக்குமிடையே இருல் பிடிப்பதில் ஏற்பட்ட பிரச்னையினால் பல லட்ச ரூபாய் பெறுமதிவாய்ந்த வலைகளைக் கொண்டிருந்த ஐந்து மீன்வாடிகள் முற்றாக எரிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

அத்துடன் இக் கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட மோதலின்போது பலருக்குப் பலத்த வெட்டுக்காயங்கள் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பானவிசாரணை முல்லைத்தீவுப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.

வவனியாப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஹேரத், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ். சிவேந்திரன் ஆகியோர் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினர்.

விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

ஸ்ரீஜெயவர்த்தனபுர

# பல்கலைக்கழகம் இன்று மீண்டும் திறப்பு

[கொழும்பு]

ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் இன்று புதன்கிழமை மீண்டும் திறக்கப்படுமென்று உயர் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஸ்டான்லி கல்பகே அறிவித்துள்ளார்.

இப்பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக திரு. கருணாசேன கொடித்துவக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளியாருக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலையடுத்து ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மூடப்பட்டது தெரிந்ததே.

(வெ)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு மோசடி:

# சந்தேகநபருக்கு பிணை: மார்ச் 17-ல் மீண்டும் விசாரணை

[யாழ்ப்பாணம்]

வெளிநாட்டில் வேலைபெற்றுத்தருவதாக நான்குபேரிடம் 55,000 ரூபா வாங்கி மோசடி செய்ததாக தொடரப்பட்ட வழக்கில், யாழ் நீதவான் திரு. வி. ஜெகசோதி, சந்தேகநபரை 25,000 ரூபா பிணையில் செல்லும்படியும், அடுத்த மாதம 17ம் திகதி மீண்டும் ஆஜராகவேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கதிரவேலு பேரம்பலம் என்பவரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட சந்தேகநபராவார்.

கடந்த வருடம் இவர், இளவாலையைச் சேர்ந்த எஸ். சிவலோகநாதனிடம் சிங்கப்பூரில் கப்பல் கம்பனியில் தச்சுவேலை பெற்றுத் தருவதாக 16,000 ரூபா வாங்கி மோசடிசெய்ததாகவும் திருநெல்வேலியைச் சேர்ந்த திருமதி இராமசாமி மகேஸ்வரியிடம், அவரது கணவரான தம்பையா இராமசாமிக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாக 12,000 ரூபா வாங்கி மோசடி செய்ததாகவும்; ஏழாலையைச் சேர்ந்த பொன்னம்பலம் கனகசபாபதியிடம் சிங்கப்பூரில் வேலைபெற்றுத் தருவதாக 11,000 ரூபா பெற்று மோசடிசெய்ததாகவும் கோப்பாயைச் சேர்ந்த தம்பிஐயா மகாதேவனிடம் சிங்கப்பூரில் வேலைவாய்ப்புப்பெற்றுத்தருவதாக 16,000 ரூபா வாங்கி மோசடிசெய்ததாகவும் யாழ் புலனாய்வுத்துறை பொலிசாரிடம் புகார்செய்யப்பட்டிருந்தது.

இதனைத்தொடர்ந்து பொலிஸ் சார்ஜன்ட் ஜி. எஸ். பிள்ளை சந்தேகநபரை கைது செய்து யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்தபோது அவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டிருந்தது.

இவ் வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதவான் பிணையில் செல்லும்படி உத்தரவிட்டார். (மா)




பரு. நகரசபை

## சுயேட்சைக்குழு வெளிநடப்பு

[புலோலி]

பருத்தித்துறை நகரசபை சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் இருவரும் வெளிநடப்புச் செய்துள்ளனர்.

டிசம்பர் மாதம் 27ம் திகதி நடைபெறவேண்டிய பருத்தித்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டம் ஜனவரி மாதம் 2ம் திகதி நகரமுதல்வர் சட்டத்தரணி எம். வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்றது.

கூட்டம் நடைபெற்றபோது காரசாரமான விவாதம் நடைபெற்றது. இறுதியில் சுயேட்சைக்குழு உறுப்பினர்களான திரு. மு.பொ.வீரவாகு [ஜே. பி.] திரு. சிவா கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் வெளிநடப்புச் செய்தனர்.

## சிரமதானம்

(புலோலி)

பொன்னுவெளி கிராமோதய சபையினர் மகாதேவா தாம்போதி சிரமதான வேலைகளை மேற்கொண்டு பாலம் அமைப்புப் பணியில் ஈடுபட்டனர்.

இச் சிரமதானப் பணியில் கிராஞ்சி, வேரவில், பாலாவி, பொன்னுவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த முப்பத்தாறு தொண்டர்கள் பங்குபற்றினர் பொன்னுவெளி கிராமோதய சபைத்தலைவர் திரு க.சிவசாமி தலைமையில் இச் சிரமதானப் பணி நடைபெற்றது.

இக் கிராமோதய சபைச் செயலாளரும், விசேட சேவை அலுவலருமான திரு செ. சிவபாலனும் இச்சிரமதானப்பணியில் கலந்து கொண்டார்.

# சில்லாலைக் கொலை: குற்றப் பத்திரம் தாக்கல்!

[மாவிட்டபுரம்]

சில்லாலை கொலைச்சந்தேகநபர்மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து வழக்கு விசாரணைக்காக ஒத்திப்போடப்பட்டுள்ளது.

சில்லாலையை சேர்ந்த பிரான்சிஸ் சுகுணராஜா என்பவரை கோடரியால் வெட்டிக் கொலை செய்தது தொடர்பாக ஜோசெப் சார்லஸ் மரியான் என்பவர் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டிருந்ததுடன் இவருக்கு மூளைக்கோளாறு இருப்பதாக மல்லாகம் நீதிபதியிடம் தெரிவிக்கப்பட்டதால் நீதிபதி அவரை அங்கொடை மனநோய் வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சையளிக்குமாறு உத்தரவிட்டிருந்தார். அவ்வாறு சிகிச்சையளிக்கப்பட்ட இச்சந்தேகநபர் தற்போது குணமடைந்துவிட்டதால் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார்.

அச்சமயம் காங்கேசன்துறைப் பொலிசார் இவர்மீது கொலைக்குற்றஞ்சாட்டி குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்தனர்.

மேற்படி நபர் தாம் சுற்றவாளி எனக்கூறியதால் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் வழக்கை விசாரணை செய்வதற்காக ஒத்திவைத்தார்.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். (எ)

## டிசம்பருக்கான நிவாரண நிதி இன்னும் இல்லையாம்

(வவனியா)

கடந்தடிசம்பர்மாத வறட்சி நிவாரணப்பணம் கொடுபடவில்லையாம்.

வவனியா தெ. த. பிரிவிலுள்ள சில கிராமங்களுக்கு இந்த வறட்சி நிவாரணப் பணம் வழங்கப்படவில்லை எனப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

விசேட சேவை அதிகாரிகளின் அசட்டையே இதற்கு காரணமென்று சொல்லப்படுகின்றது. (அ)

# "அமைச்சரவையில் தமிழர்கள்: உலகத்திற்குப் பிரச்னையை மறைக்கும்ஒருமோசடியாகும்'

## - யாழ். எம். பி.

[சுண்டிக்குளி]

"அமைச்சரவையில் சில தமிழ் அமைச்சர்களையும், உயர்நிர்வாகப் பதவிகளில் ஒரு சில தமிழர்களையும், பாதுகாப்புப்படைத்தலைமைப்பீடத்தில் ஒரு தமிழரையும் வைத்துக் கொண்டுள்ள அரசின் நடவடிக்கை உலக நாடுகளின் கவனத்திலிருந்து தமிழர்பிரச்னைகளை மறைக்கும்மோசடிச்செயலாகும்."

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப்பட்டப்படிப்புகளுக்கு பட்டப்படிப்பு வகுப்புகளை நடத்திவரும் யாழ்ப்பாணத்திலுள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியின் புதிய ஆண்டுமாணவர்களின் வரவேற்பு நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ்ப்பாண எம்.பி திரு வெ யோகேஸ்வரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய ஆண்டு மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சி பட்டப்படிப்பு கல்லூரி முதல்வர் த.வர்ணகுலேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் சட்டத்தரணிகள் ஆர். ரி. இரத்தினசிங்கம், சோ. தேவராஜா, தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த கு. உதயகுமார், கல்லூரி தமிழ் மாணவர் மன்ற செயலாளர் திரு. பாக்கியநாதன் ஆகியோரும் கலந்கொண்டனர்.

யாழ். எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் தொடர்ந்து கூறியதாவது;

"உலக நாடுகளின்கண்களில் இலங்கையில் தமிழர் பிரச்னைகளை மறைக்கு பிரசாரம்செய்து கொண்டு நாட்டில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளான உயர்கல்வி வாய்ப்பு, தொழில் வாய்ப்புகளை இன ஒதுக்கல் ரீதியாக அரசு அமுல் செய்கின்றது. ஆட்சியாளரின் பேரினவாதக் கொள்கையால் தகுதியும், ஆற்றலும் உள்ள தமிழ் இனத்தின் பிள்ளைகளின் உயர்கல்வி, தொழில் நியமனங்கள் மறுக்கப்பட்டுபெரும் தடைகளுக்கு உள்ளாகியிருக்கிறது"

தமிழ் பிள்ளைகளின் உயர் கல்விக்கு தொழில் வாய்ப்புக்கும் அரசாங்கம் திட்டமிட்ட இன ஒதுக்கல் கொள்கையாலும், தடைகளாலும் தமிழ் இனத்தின் எதிர்காலத்தைச் சூனியமாக்கிக் கொண்டிருக்கிறது கட்டுக்கோப்புடைய தனியார் கல்வி நிறுவனங்கள் ஒழுங்கத்தோடு, சீராக இயங்கி மாணவர்களின் நலனைப்பேணி தமது சேவைக்கு நியாயமான வருமானத்தையே பெறவேண்டும்."

கல்வி கற்க ஆவலோடுவரும் மாணவர்களுக்கு உண்மையான கல்வியை அளிக்காது ஏமாற்றுவதை முற்றாகக் கைவிட்டு தமிழ் மாணவர்களின் கல்வி அவலநிலைக்கு வழி காட்டுதல் வேண்டும்.

[உ-க]

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

(புலோலி)

முல்லைத்தீவு ஆரம்ப நீதி மன்ற நீதவானாக இருந்து நீதிச்சேவை ஆணைக்குழுவால் நீதிமன்ற நீதவானாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ள திரு. கணபதிப்பிள்ளை இம்மாதம் 14ம் திகதி முதல் பருத்தித்துறை நீதிமன்றநீதவானாகப்பொறுப் பேற்கவுள்ளார்.

## "கிராம வளர்ச்சிக்கு சிறுவர் பாடசாலை இன்றியமையாதது"

[புலோலி]

கிராமப்புறப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்குக் கிராமம் தோறும் சிறுபாடசாலைகள் இன்றியமையாதன. காந்தீய இயக்கத்தினர் சிறுவர் பாடசாலைகளை ஆரம்பித்துநடாத்தி வருவது கிராமமக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இவ்வாறு கவுதாரிமுனை விசேட சேவை அலுவலர் திரு. க. வரமதேவன் சொன்னார்.

பூநகரிப்பகுதியில் உள்ள கவுதாரிமுனையில் ஆரம்பிக்கப் பட்டு உள்ள காந்திய சிறுவர் பாடசாலைத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே கிராசேவை அலுவலர் திரு. ந. வாமதேவன் மேற்பகு தெரிவித்தார்.

திரு. ச. தவராசா தலைமையில் இத்திறப்புவிழா நடைபெற்றது.

## நிறைகுறைந்த பாண் விற்கப்படுவதாக புகார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண நகரப் பகுதிகளில் உள்ளசில பேக்கரிகளில் உற்பத்திசெய்து விற்பனைக்கு விடும் பாண் நிறைகுறைந்து காணப்படுவதாக யாழ் உதவி உணவுக்கட்டுப்பாட்ட திகாரிக்கு புகார்கள் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் பாவனையாளர் ஒருவரால் வாங்கப்பட்ட பாண் ஒன்று நாலு அவுன்ஸ் நிறைகுறைந்திருந்ததாக புகார் செய்யப்பட்டுள்ளது.

நிறைகுறைந்த ஒருறுத்தல் பாண் ஒன்று உணவுக்கட்டுப் பாட்டதிகாரியின் பார்வைக்கு பாவனையாளர் ஒருவரால கொடுக்கப்பட்டது.

## பிரதி பொலிஸ் மா அதிபர் நடத்தும் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

பொலிஸ்-பொது மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தவும், யாழ். மாவட்டத்தில் கொள்ளை, கொலை, களவு, வழிப்பறி, பிற்பொக்கட் போன்ற சம்பவங்கள் இடம் பெறுமல் செய்வது குறித்தும், வடபிராந்திய பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. டபிள்யூ. பி. ராஜகுருவும், பொலிஸ் அதிபர் திரு. ஆர். இ. ஆனந்தராஜனும் கருத்தரங்குகளை நடத்தவுள்ளனர்.

இம்மாதம் 19-ம் திகதி காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் முதலாவது கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் வடபகுதியிலுள்ள பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுச் சபைகள், விழிப்புக்குழுக்கள், சமாதான சபைகள், மற்றும் சமூக நலன் விரும்பிகள், பொதுமக்கள், பொலிஸ் நிலைய அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். [மா]

## இன்றைய பலன்

தை மாதம் 27-ந் திகதி

புதன் கிழமை

(9—2—83)

மேடம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும். சொந்தமாக தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும்.

இடபம்: பகை மூட்டம் வட்டமிடும் வீணான வார்த்தைகளால் மனம் புண்படும். தொழில் துறையில் முட்டுக் கட்டைகள் தோன்றக்கூடும் மனத்திடம் நன்று.

மிதுனம்: மக்களால் மகிழ்ச்சி புதுமையில் நாட்டம் மூதியவர் ஒருவரின் உதவி உங்கள் நல்வழியை உருவாக்கும் அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து உண்டு.

கடகம்: தொழில் புரியும் இடத்தில் தொல்லைகள் தோன்றக்கூடும் இதன்மூலம் பொருள் விரயமாகும் மேலதிகாரிகளின் கண்டனைகளுக்கு ஆளாகுவீர்கள்.

சிங்கம்; இறைவழிபாடு மேவிடும். இதயத்தில் அமைதியும் ஏற்படும் பிதாவழிமூலம் நல்ல செய்தியும் கிடைக்கும் கல்வியில் பிள்ளைகளின் முன்னேற்றமுண்டு.

கன்னி: வாழ்க்கையின்று மல்லிகைத் தோட்டம் போல் மணம் பரப்பிக்கொண்டிருக்கும் காதல் சிட்டுக்களுக்கு இன்று கவர்ச்சிகரமான தினம்.

துலாம்: பொதுப்பணிகளில் ஈடுபடவிரும்புவீர்கள் குறிப்பாக அரசியல் வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கும் சிலர் புண்ணிய ஸ்தலயாத்திரையை மேற்கொள்ளுவார்கள்.

விருட்சிகம்; வியாபாரத் துறைகளில் ஈடுபடுபவர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் எதிர் பார்த்த விடயத்தில் நஷ்டம் ஏற்படலாம்.

தனு: மத்த நிலையில் வாழ்க்கை சிலரைப் பாதிக்கச் செய்யும் கிலவிஷமிகளிடம் பெண்கள் அகப்பட நேரிடும் உறவு முறைகளில் தடை ஏற்படும்.

மகரம்: கடந்தகால நினைவுகளால் இன்பக்கடலில் மூழ்குவீர்கள் இதையத்தில் அமைதி நிலவும் இல்லம் பல்கலைக்கழகமாக மாறும்.

கும்பம்: எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தை தரலாம் எதிரிகளின் சூழ்ச்சி பலமாக அமையும் பழைய நினைவுகள் தலை தூக்கும் நிதானபுத்தி நன்று

மீனம்: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி உறவு நீடிக்கலாம். வாகன நலனுக்கும் இடமுண்டு.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை.

## இடமாற்றம்

(பேசாலை)

கோட்டை ரயில் நிலையத்தில் இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணிகளுக்கு ரிக்கற் வழங்கும் உதவி அதிபராக கடமையாற்றிய திரு. ஏ. ஜெயபிரகாசம் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் இவர் பேசாலை ரயில் நிலைய உதவி அதிபராக இம்மாதம் முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க)

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் சுதாகர் - ராதிகா கிழக்கே போகும் ரயில் (கலர்)

றீகல் (யாழ். நகர்) கடைசி சில தினங்கள் எங்க வீட்டுப் பிள்ளை

வெஸ்லி (மானிப்பாய்) தினசரி- 6-15, 9-15 சனி. ஞாயிறு 2-30 முரட்டுக் காளை

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் Body Heat (Adults only)

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் கமல்-ஸ்ரீதேவி பதினாறு வயதினிலே

ஸ்ரீதர் (யாழ். நகர்) கடைசிவாரம் தினசரி 4 காட்சிகள் எம். ஜி. ஆர். நம் நாடு


ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30 ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த மாயா பஜார்

சாந்தி (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-30
9th—14th "FRENCH FILM FESTIVAL"
9th only: PEAU d ANE
(DONKEY'S SKIN) (color)

யாழ். நகரில் இதுவே கடைசி சந்தர்ப்பம் இன்னும் சில தினங்கள் மட்டும் தினசரி 4 காட்சிகள் வின்ஸர் (யாழ்நகர்) ✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ் "வசந்தமாளிகை" (கலர்) (இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30 சிவாஜி - சாவித்திரி - தேவிகா- முத்துராமன் - என். டி. ராமராவ் கர்ணன் (ஈஸ்ட்மன் கலர்) (இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-15, 6-00, 9-45 ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ் கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி நடித்த பாதாள பைரவி மந்திரம் தந்திரம் மயிர்கூச்செறியும் பயங்கரச் சண்டைகள், சாதம் காட்சிகளை வெண்திரையில் காணத்தவறாதீர்கள். (இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)



யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 'சைக்கிள் டயர்களை மேலே உள்ள படத்தில் காண்கிறீர்கள். நோர்தேண் இன்டஸ்றீஸ் நிறுவனம் இந்த டயர்களை உற்பத்தி செய்கிறது. உற்பத்தியின் முதல் 101 டயர்களை வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் காணிக்கையாக ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. து. சீனிவாசகத்திடம் நிறுவன உரிமையாளர் திரு. த. சண்முகலிங்கம் வழங்கவும் அவற்றை திரு. சீனிவாசகம் டயர் விற்பனையாளர் கம்பனிக்கு விற்பனை செய்கின்றார்.


முன் பக்கத் தொடர்ச்சி ...|

11-02-1983 வெள்ளி தொடக்கம்

தினசரி

அதி நவீன லக்ஷறி கோச் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு

இடம்: கஸ்தூரியார் வீதியிலுள்ள ஹோட்டல் பரடைஸ் முன்பாக.

கொழும்பில்

கோட்டைப் புகையிரத நிலையம் முன்பாக

சௌகரியமான உறங்கலிருக்கை ஆசனத்தில் சொகுசாக, ஆனந்தமாக, உங்கள் பயணத்தைச் செய்திடலாம். பாதுகாப்பான, கண்ணியமான சேவை

கே. எஸ். பி. டூர்ஸ்

ஒவ்வொரு பிரயாணிகளுக்கும் விபத்து நஷ்டஈட்டுக் காப்புறுதி செய்யப்படும்.
ஆசனங்களை முன்னதாகவே பதிவுசெய்துகொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

கொழும்பில்:

K. செல்வராஜா & கம்பனி
204, காஸ்வேக்ஸ் வீதி, கொழும்பு - 11.
தொலைபேசி: 32107

கவிதா மோட்டேர்ஸ்
354, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி: 31782

அஜந்தா ஹோட்டல் லிமிட்டெட்
125, ஒலகொட் மாவத்தை, கொழும்பு - 11.
தொலைபேசி: 28089, 32769

யாழ்ப்பாணத்தில்:

கே. செல்வராஜா & பிரதர்ஸ்
37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23517

விநாயகர் ட்ரேடிங் கம்பனி
இல. 6 A, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்: தொலைபேசி; 23403

இன்ரநஷனல் ட்ரேடிங் கம்பனி
கண்டி வீதி, கிளிநொச்சி.
தொலைபேசி: 303

K. S. B. TOURS
354, SRI SANGARAJA MAWATHA,
COLOMBO - 10
Telephone : 31482

6137


## வரவுசெலவு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
சட்டமூலத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தச் சட்டமூலத்தை இம்மாதம் 25ம் திகதி நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வார். வரவு செலவுத் திட்ட உரையை அடுத்தமாதம் நிதியமைச்சர் சபையில் நிகழ்த்துவார். வரவுசெலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை எவ்வாறு சமாளிக்கப்போகிறார் என்ற விபரத்தையும் அன்று அவர் தெரிவிப்பார்.

### நிதியமைச்சர் மதிப்பீடு

நிதியமைச்சரின் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி மொத்த செலவுத் தொகையான 4965 கோடியே 50 லட்சம் ரூபாயில் மீளப் பெறக்கூடிய செலவினமான 2566 கோடியே 20லட்சம் ரூபாயும் மூலதன செலவினமான 2399 கோடியே 30 லட்சம்' ரூபாயும் அடங்கும்.

### கடன்கள் வெளியார் உதவி

துண்டுவிழும் தொகை கடன்கள், வெளிநாட்டு உதவிகள் மற்றும் துறைகளிலிருந்து சமாளிக்கப்படுமென்று நிதியமைச்சர் அமைச்சரவைக்குத் தெரிவித்துள்ளார்.

கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு எஸ். தொண்டமானும் தமது அமைச்சின் பல்வேறு திட்டங்களுக்கான நிதி வசதிகள்பற்றிய கோரிக்கையை நேற்று அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

### பொலித்தீன் பைகளில் சுண்ணும்பு

பொலித்தீன் பைகளில் சுண்ணாம்பு அடைத்து விற்கப்படும் பாக்கட்டுகளைக் கையாடிய சிறுவர்கள் பலரின் கண்கள் பாதிக்கப்பட்டுள்ளதுபற்றி வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ் ஹமீது அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இந்தப் பொருட்களை சிறுவர்களின் கைகளில் அகப்படாதவாறு பாதுகாக்கும்படி பொதுமக்களுக்குப் பிரசாரம்செய்யும்படி ராஜாங்க அமைச்சரையும் வர்த்தக அமைச்சரையும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன கேட்டுக்கொண்டார். (இ)

## பொலிஸ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பிறேக் இல்லாத இந்த வானை யாழ்ப்பாணத்திலுள்ள கராஜ் ஒன்றிக்கிட்டுச் செல்வதற்கும் சிவசுப்பிரமணியம தீர்மானித்திருந்தாராம்.

வானை அராலிப்பாலத்துக் கண்மையில் பொலிசார் நிறுத்தும்படி சமிக்ஞை செய்தபொழுது பிறேக் இல்லாத தால் மெதுவாக வானை ஓட்டிச் சென்றே நிறுத்த முடிந்ததாகவும், அதற்கிடையில் இவர்கள் மீது துப்பாக்கிச்சூடுகள் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் இருவரையும் பொலிசார் தமது ஜீப்பில் ஏற்றிக் கொண்டுவந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் தெரியவருகிறது.

உதயகுமாரனுக்கு வலது முழங்கைப்பக்கமாகவும், சிவசுப்பிரமணியத்துக்கு இடதுகையின் மணிக்கட்டுப்பக்கமாகவும் துப்பாக்கிச் சூடுகள் காணப்பட்டன.

நேற்று இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட போதிலும் இரத்தப்பெருக்கு ஏற்பட்டவண்ணமிருந்தது.

உதயகுமாரன் மயக்கமடைந்த நிலையில் இருக்கக் காணப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான வான் யாழ். பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. வானின் இலக்கம் 28 ஸ்ரீ 3378,

இரகசியத் தகவலின்பேரில், கடத்தல் முயற்சியை முறியடிப்பதற்காகப் பொலிசார் கடமையிலீடுபட்டிருந்த சமயம் இச்சம்பவம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

யாழ். பொலிஸ் அதிபர் திரு. ரி. ஆனந்தராஜா விசாரணை மேற்கொண்டுள்ளார். (மா)

## நீர்வேலி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
விசாரணை நேற்று ஒத்தி வைக்கப்பட்டது. இன்று விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (இ)

## பத்திரிகையாளர் காலமானார்

(கொழும்பு)

'தினகரன்' பிரதம உதவி ஆசிரியர்திரு ஈ. வி. சுப்பிரமணியம் தமது 50வது வயதில் நேற்று மாரடைப் பினால் கொழும்பில் காலமானார்.

கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக 'லேக்ஹவுஸ்' ஸ்தாபனத்தில் பணியாற்றிய இவர் படிப்படியாகப் பதவிஉயர்வு பெற்று, பிரதம உதவிஆசிரியரான இவர் தினகரனில் 'சைவ மஞ்சரி' என்ற பகுதியை ஆரம்பித்து, சைவத்தின் உயர்ச்சிக்கு உழைத்தார்.

## சாயிசமித்தி சிவராத்திரி

[யாழ்ப்பாணம்]

பகவான் சத்தியசாயிசேவா சமித்தியினர் இம்மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்புள்ள ஸ்ரீசத்திய சாயி சேவா சமித்தி மண்டபத்தில் 11ம் திகதி மாலை 6 மணி தொடக்கம் சனிக்கிழமைகாலை 6 மணி வரைசிவராத்திரி நிகழ்ச்சிகள் நடைபெறும்.

திரு. மு. கந்தையாவின் தேவாரநிகழ்ச்சியும் திருமதி. இ பாலகிட்ணர் திரு. வே சிவஞானம், திரு. எஸ். ஞானசேகரம் அமுதன் அண்ணாமலை ஆகியோரின் பஜனை சிவபுராணம் என்னும் நிகழ்ச்சிகளும் அங்கு இடம்பெறும் [ப]

## குருநகரில் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி ஜி பொன்னம்பலத்தின் நினைவு நாளான இன்று குருநகரிலுள்ள அவரது உருவச்சிலைக்கு மாலை அணிவித்தலும், சிலைக்கருகில் அஞ்சலிக் கூட்டமும் மாலை 5 மணியளவில் நடைபெறும்.

## பிரெஞ்சுப் பட விழா

[யாழ்ப்பாணம்]

பிரஞ்சுப் படவிழாவொன்று இன்று காலை 10-30 மணிக்கு யாழ் சாந்தி சினிமாவில் நடைபெறுகின்றது.

இலங்கையிலுள்ள பிரஞ்சுத் தூதரகமும், யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத்தெருவில் உள்ள பிரஞ்சுக் கழகமும் சேர்ந்து இப்படவிழாவை நடத்துகின்றன.

பிரஞ்சுத் தூதரக கலாச்சாரப் பிரிவு அதிகாரி திரு. ஜெரார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்வர்.

## பாராளுமன்ற...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
றது.

ஜனாதிபதியை குதிரைப் படை வீரர்கள் அணிவகுத்து பாராளுமன்றத்துக்கு அழைத்துவருவார்கள். அங்கு சபாநாயகர் அவரை வரவேற்பார். ஜனாதிபதி ஆயுதப் படையினரின் மரியாதையை ஏற்றுக்கொள்வார் 21துப்பாக்கிவேட்டுகளும் தீர்க்கப்படும்.

இவர் ஒரு சைவப்புலவராவார்.

இவரது ஆவரங்காலிலுள்ள இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### W. W. நடராஜா (ஆனந்தர்)

முன்னர் பொது வேலைப் பகுதியில் (P. W. D) கடமையாற்றிய W W. நடராஜா 7-2-83 ல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி W. விஜயரட்ணம் தம்பதிகளின் மகனும், நாகேஸ்வரியின் (மலர்) அருமைக் கணவரும், விஜயகுமார் (நீர்ப்பாசன இலாகா) ராஜ்குமார் (சிங்கப்பூர்), செயந்தி (U. K), ரஜந்தி (சிங்கப்பூர்), மிலந்தி, துஷ்யந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (U. K.), ரவீந்திரா (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும், சஞ்ஜீவனின் பேரனும் ஆவர். ஈமக்கிரியைகள் இன்று (9-2-83) புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு பம்பலப்பிட்டிய பிளாட்ஸ் (Flats) இல் நடைபெற்று தகனக்கிரியைக்காகக் கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: ஆ. குகேந்திரா

6134

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ... 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.D. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 24126